செய்தி வெளியீடு எண் :41 நாள் :24.02.2020

**தேனி மாவட்டம்**
**கால்நடைகளுக்கான 1வது சுற்று கால் மற்றும் வாய்க்காணை**
**தடுப்பூசிப் பணி நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**
*****

*தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் (NADCP) மூலம் 1வது சுற்று கால் மற்றும் வாய்க்காணை நோய் தடுப்பூசிப்பணி நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*மேலும், இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,*

*தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2020 முதல் 19.03.2020 முடிய காலை 6.00 மணி முதல் 9.00 மணிவரை மற்றும் மாலை 3.00 மணி முதல் 6.00 மணி முடிய, பசுவினம் மற்றும் எருமையின கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்க்காணை நோய்க்கான தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற உள்ளது.*

*மேலும் 20.03.2020 முதல் 29.03.2020 முடிய விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி பணிகள் நடைபெறவுள்ளது. எனவே, அனைத்து கால்நடைகள் வளர்ப்போர்களும் தங்களது கிராமங்களுக்கு அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களுக்கு கால்நடைகளை சென்று தடுப்பூசிகள் போட்டு பயனடையுமாறு தெரிவித்துள்ளார்.*

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**